சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 24.02.2025

DW2:சுப்பிரமணியன் த/பெ– அப்பர்சாமி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

சரவணா டிப்பன் சென்டரை எனது தாயார் மகமாயி அம்மாள் நடத்தி வந்தார் என்றால் சரிதான். சரவணா டிப்பன் சென்டரை தவிர்த்து எனது தாயாருக்கு வேறு சொத்துக்கள் இருந்தது. சரவணா டிப்பன் சென்டர் மற்றும் எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட மற்ற சொத்துக்களையும் நானும், எனது சகோதர, சகோதரிகள் பாகம் பிரித்து கொண்டோம். இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி முருகன் எனது சகோதரர். மேற்படி பாகம் பிரித்து கொண்டதின் அடிப்படையில் சரவணா டிப்பன் சென்டரை 1ம் பிரதிவாதிக்கு ஒப்படைத்து விட்டோம். எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது அண்ணனிடம் ரூ.10 லட்சம் வாதி தொழில் செய்வதற்காக பெற்றுக்கொண்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ரூ.10 லட்சம் தொகையை வாதி எப்போது பெற்றுக்கொண்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி அருணகிரிக்கு நான் நடத்தி வந்த வெத்தலைபாக்கு கடையை ஒப்படைத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. வெத்தலைபாக்குக்கடையை நான் 2ம் பிரதிவாதிக்கு எப்போது கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. 2ம் பிரதிவாதி தற்போது ஆட்டோ வைத்து ஓட்டியும், ஸ்டேஷ்னரி ஷாப் வைத்தும் தொழில் செய்து வருகிறார். வெத்தலைபாக்குகடை நடத்தி வந்த பின்னர் 2ம் பிரதிவாதி ஜவுளிக்கடை நடத்தி வந்தார். தற்போது அதை நடத்தி வரவில்லை. ஜவுளிக்கடை எந்த வருடம் நடத்தினார் என்று ஞாபகமில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் வழக்கு 4, 5

சொத்துக்களை நான் கிரையமாக அருணகிரியிடம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு 4, 5 சொத்துக்களை எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. எனது சகோதரர் 1ம் பிரதிவாதி முருகன் 5ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் கொடுத்துள்ளதாக சொன்னார்கள், எனக்கு நேரடியாக தெரியாது. 1ம் பிரதிவாதி முருகன் 5ம் பிரதிவாதிக்கு எந்த சொத்தை தானமாக கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. அந்த சொத்துக்கள் சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது எனக்கு தெரியும். தானசெட்டில்மெண்டு பத்திரத்தை நான் படித்து பார்க்கவில்லை. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்தான சரவணா டிப்பன் சென்டரில் இருந்து பெறப்பட்ட வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டது என்பதால் வாதிக்கு பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விபரங்கள் தெரியாது என்றும், எனது சகோதரர் 1ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதினால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.